# நாமக்கல் ஸ்ரீ ஆஞ்சநேயர் பகவான்

## 22-ஆம் ஆண்டு சிறப்பு அபிஷேக விழா

மஹா அன்னதான விழா அழைப்பிதழ்

08-01-2017 ஞாயிற்றுக்கிழமை



**கிளாம்பாடி ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ ஐயப்ப பக்தர்கள் நற்பணி குழு**

**ஸ்ரீ ஆதி சங்கரர் நற்பணி குழு, ஈரோடு மாவட்ட ஜனகல்யாண்**

கிளாம்பாடி, மலையம்பாளையம், ஈரோடு மாவட்டம்.



# நாமக்கல் ஸ்ரீ ஆஞ்சநேயர் பகவான்
# 22–ஆம் ஆண்டு மஹா அபிஷேக விழா
# மற்றும் மழை வேண்டி மக்கள் நலம் வேண்டி
# நடைபயணம் பால்குடம் எடுத்து ஊர்வலம் அழைப்பிதழ்

tnhrce.org

மழை வேண்டியும், மக்கள் நலம் வேண்டியும், மக்களை பஞ்சம், பிணி மற்றும் இயற்கையின் பேரழிவுகளில் இருந்து காத்து தொழில் வியாபாரம், கல்வி, விவசாயம் மற்றும் பயிர்கள் செழித்து எல்லா வளங்களும் பெறவும், எல்லா ஜீவ ராசிகளும், பேரானந்தத்துடன், வாழவும், மக்களை பிடித்திருக்கும் போட்டி, பொறாமை இவைகளில் இருந்து காக்கவும், **காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியார் சுவாமிகளின் நல்லாசியோடும், அருள்மிகு. கிளாம்பாடி சொக்கநாச்சியம்மன் அருளோடும்**, வருகிற 6-1-2017 வெள்ளிக்கிழமை கருமாண்டம்பாளையம் கிருஷ்ணாபுரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுந்திர விநாயகர் கோவிலில் கணபதி ஹோமம் தொடங்கி ஸ்ரீ விநாயரை வழிபட்டு 7-1-2017 அதிகாலை **கொங்கு மஹால்** அருகில் உள்ள விநாயகர் கோவிலில் இருந்து நாமக்கல் நோக்கி மக்கள் வாழ்வு மலர நாட்டில் மழை பெய்ய வேண்டி நடைபயணம் செல்ல உள்ளது. 8-1-2017 ஞாயிற்றுக்கிழமை நாமக்கல் முல்லை மஹாலில் இருந்து ஸ்ரீ ஆஞ்சநேயர் பகவானுக்கு பால்குடம் எடுத்து வலம் வந்து சிறப்பு அபிஷேகம் நடைபெற உள்ளது. இந்த கூட்டு பிராத்தனைக்கு **பஞ்ச பூதேஷ்வரம் ஸ்ரீ பஞ்சமுகப் பிரத்யங்கிரா** திருக்கோயில் ஸ்ரீ ஆஞ்சநேயர் அருள்பெற்ற **ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகள்** அவர்கள் முன்னிலையில் கூட்டு பிராத்தனை நடைபெறும். மக்கள் துன்பம் இன்றி வாழவும், நாடு நலம் பெறவும், இந்த கூட்டு பிராத்தனையில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**கணபதி ஹோமம், நடைபயண துவக்கம் இடம் மாற்றப்பட்டுள்ளது.**

வெளியூர் பக்தர்கள், குழந்தைகள், பெண்கள் போன்றோர்கள் போக்குவரத்து வசதிக்காகவும், அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று ஸ்ரீ சொக்கநாச்சியம்மன் அருளோடு பெரியோர்களின் ஆலோசனைப்படி மக்கள் ஆதரவோடு கணபதி ஹோமம் மற்றும் நடைபயண துவக்கவும், **கருமாண்டம்பாளையம் கொங்கு மஹால்** அருகில் உள்ள கிருஷ்ணாபுரம் ஸ்ரீ சுந்திரவிநாயகர் ஆலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேற்படி கோவிலில் இருந்து 7-1-2017 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு நடைபயணம் புறப்படும். நடைபயணத்தில் கலந்து கொள்ள இரவில் வரும் பக்தர்களுக்கு கருமாண்டம்பாளையம் கொங்கு மஹால் தங்குவதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. மார்கழி 1-ம் தேதியில் இருந்து நாமக்கல் செல்லும் பக்தர்களுக்கு மாலை அணிவிக்கப்படும்.